




தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர் -02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ்-43

# பத்தரமுல்லையில் ஆர்ப்பாட்டத்துக்கு வந்த பிக்கு திருப்பியனுப்பப்பட்டார்

**"தயவு செய்து போங்கள் "சுவாமி" உங்களால் தான் இந்த நாடு இந்த நிலைக்கு வந்தது.. ராஜபக்சக்களுக்கு ஆதரவு கொடுத்து நாட்டை நாசமாக்கிவிட்டீர்கள்"**

பத்தரமுல்லை சீலரத்ன தேரோவே இவ்வாறு மக்களால் எதிர்க்கப்பட்டு வெளியேற்றப்பட்டவர். பத்தரமுல்லையில் இன்று இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள முற்பட்ட ஜனசெத பெரமுனவின் தலைவர் வணக்கத்துக்குரிய பத்தரமுல்லே சீலரதன தேரர் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்களால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். வணக்கத்துக்குரிய பத்தரமுல்லே சீலரதன தேரர், பொதுமக்களின் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஒற்றுமையை வெளிப்படுத்தும் முகமாக குறித்த இடத்திற்கு வருகை தந்துள்ளார். எவ்வாறாயினும், பொதுமக்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பிக்குவை பேச அனுமதிக்க மறுத்ததுடன், அவரை அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு கோரிக்கை விடுத்தனர். போராட்டக்காரர்களால் வெளியேறுமாறு பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து, வணக்கத்துக்குரிய பத்தரமுல்லே சீலரதன தேரர் போராட்டத்தை கைவிட்டு வெளியேறினார்.

## அமைச்சர்கள் தங்கள் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடமே கையளிக்கவேண்டும் இல்லாவிட்டால் அந்த இராஜினாமா சட்டபூர்வமானதில்லை– சாலிய பீரிஸ்

அமைச்சர்கள் தங்கள் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடமே கையளிக்கவேண்டும் இல்லாவிட்டால் அந்த இராஜினாமா சட்டபூர்வமானதில்லை என சட்டத்தரணி சாலியபீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது : அமைச்சர்கள் தங்கள் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிக்கும்போதே அவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டனர் என கருதப்படும். அமைச்சர்கள் பிரதமரிடம் தங்கள் இராஜினாமாவை கையளித்துள்ளனர் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன அப்படியானால் இந்த இராஜினாமாக்கள் சட்டபூர்வ தன்மையை கொண்டவையில்லை. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் என்ன நடக்கின்றது என்பதை மக்களிற்கு தெளிவுபடுத்தவேண்டிய கடப்பாடு உள்ளது. எங்கள் நாட்டினாலும் பொருளாதாரத்தினாலும் இந்த நிச்சயமற்ற நிலையை தாங்கமுடியாது என நான் கருதுகின்றேன்.

## பாராளுமன்றில் முஸ்ஸாராப் எம்.பி.க்கு 5000தாளை வழங்கிய சாணக்கியன்

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட போவதாக எஸ்.எம்.எம்.முஸ்ஸ ாரப் நாடாளுமன்றில் இன்று அறிவித்தார். இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் 5000 ரூபாய் தாளை அவர்முன் காண்பித்தார். இதன்போது சிறிது நேரம் எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டனர்.

# சீனாவை நம்பி ஏமாந்த ராஜபக்சே குடும்பம்.. "டிராகன்" சகவாசமே வேண்டாம்.. தெறித்து ஓடிய நாடுகள்! பின்னணி



இலங்கை மற்றும் பாகிஸ்தானில் கடுமையான பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளதால் தெற்காசியாவில் இருக்கும் பல்வேறு நாடுகள் சீனாவை பார்த்து தெறித்து ஓட தொடங்கி உள்ளன. எங்கே சீனா தங்களுக்கும் கடன் கொடுத்து சிக்கலை உண்டாக்குமோ என்ற அச்சம் தெற்காசிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் நேபாள பிரதமர் ஷேர் பகதூர் இந்தியாவிற்கு வந்திருந்தார். இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளுடன் பேசிய போது அதிகாரபூர்வமற்ற முறையில் அவர் சில தகவல்களை பகிர்ந்து கொண்டதாக கூறப்படுகிறது. அதில், சீனா எங்களுக்கு கடன் கொடுக்க முயன்றது. அதற்கு நீங்கள் எங்களுக்கு பொருளாதார உதவிகளை வேண்டுமானால் செய்யுங்கள். ஆனால் கடன் வேண்டாம், என்று கூறிவிட்டேன், என்று நேபாள பிரதமர் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பான தேசிய ஊடகங்கள் பல செய்திகளை வெளியிட்டு இருந்தன.

02ஆம் பக்கம் பார்க்க....

# சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய விடுத்த அழைப்பை மக்கள் விடுதலை முன்னணி நிராகரிப்பு !!



இலங்கையில் சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) நிராகரித்துள்ளது. ஜனாதிபதியினால் வழங்கப்படும் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை ஏற்க கட்சி மறுப்பதாக ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார். எந்தவொரு இடைக்கால, குறுகிய கால அல்லது அனைத்துக் கட்சி அரசாங்கக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அவர்கள் ஜனாதிபதி அல்லது பிரதமருடன் இணைந்து கொள்ள மாட்டார்கள் என்று கட்சி கருதுகிறது என்று அவர் மேலும் கூறினார். "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச முதலில் தனது பதவி விலகலை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகு, இந்த நெருக்கடியை நிர்வகிப்பதற்கான ஒரு அமைப்பைப் பற்றி விவாதிக்கலாம். அப்போது தேர்தல் நடத்தி, பொதுமக்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசை நியமிக்கலாம்" என்றார்.

# தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் அஸாத் சாலி விடுத்துள்ள விஷேட அறிக்கை



தற்போதைய அரசாங்கம் தமது அத்தியாவசியத் தேவைகளில் கவனம் செலுத்தி சமையல் எரிவாயு, எரிபெருள் பால்மா மற்றும் உணவுப் பொருள்களைப் பெற்றுத் தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் என்பனவற்றையும் பொருட்படுத்தாமல் வீதிகளில் இறங்கி தமது அன்றாட வாழ்வுரிமைக்காகவும் வாழ்வாரத்துக்காகவும் போராடி வருகின்றனர். இவ்வேளையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பனவற்றின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தமது உரிமைகளுக்காகப் போராடும் பெரும்பான்மையான மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்த்து மக்களுக்கு ஆதரவாகவே நடந்து கொள்ள வேண்டும்.

03ஆம் பக்கம் பார்க்க...

# பதவிவிலகப்போவதில்லை – பெரும்பான்மையை நிரூபிக்கும் கட்சியிடம் அரசாங்கத்தை ஒப்படைக்க தயார் – ஜனாதிபதி

பதவிவிலகப்போவதில்லை ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிருபிக்கும் கட்சியிடம் அரசாங்கத்தை ஒப்படைக்க தயார் என ஜனாதிபதி ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் சிரேஸ்ட தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலகவேண்டும் என நாடளாவியரீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற அதேவேளை ஜனாதிபதி அரசியல் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

ஜனாதிபதி தான் பதவி விலகப்போவதில்லை ஆனால் 113 பெரும்பான்மைய நிருபிக்கும் கட்சியிடம் அரசாங்கத்தை ஒப்படைக்க தயார் என தெரிவித்தார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாடாளுமன்றம் இன்று கூடியுள்ளது எந்த கட்சிக்கு பெரும்பான்மை உள்ளது என்பதை உறுதி செய்வதற்கான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பலர் அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக்கொண்டுள்ளதை தொடர்ந்து அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழந்துள்ளது. எனினும் சாதாரண பெரும்பான்மையுடன் தொடர்ந்தும் ஆட்சியை தக்கவைப்பதற்கான முயற்சிகளில் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன ஈடுபட்டுள்ளது.

அரசாங்கத்தின் செய்ற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல எதிர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் நோட்டன் அட்டன் வீதியில், அமைந்துள்ள தோட்ட மக்கள் உட்பட அனைவரும் டிக்கோயா நகருக்கு பேரணியாக சென்று அரசாங்கத்துக் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.






## சிங்களவர்கள் தங்களுக்குள் அடிபடும் போது தமிழர்கள் ஏன் முட்டு குடுக்க போகிறார்கள்...

சிங்களவர்கள் தங்களுக்குள் அடிபடும் போது தமிழர்கள் ஏன் முட்டு குடுக்க போகிறார்கள்...

தமிழர்கள் தொடர்பான அத்தனை விடயங்களிலும் சிங்களவர்கள் ஒன்றாகவே நின்றார்கள். 2009 மே மாதம் லட்சக்கணக்கில் தமிழ் மக்களை கொன்று பெற்ற யுத்த வெற்றியில் வேறு பாடின்றி அனைத்து சிங்களவர்களும் பால் சோறு சாப்பிட்டு மகிழ்ந்தனர். ஏன் ராஜபக்சாக்கள் சிங்கள மக்களின் கீரோ ஆனார்கள். அதவது தமிழர்களின் பலத்தை அழித்து ஒடுக்கியதால் அவர்கள் கீரோ ஆனார்கள். இன்றும் வடக்கில் தமிழர்கள் எழுச்சி பெற்றுவிட்டார்கள் என்று ஒரு செய்தி போகட்டும்.. தற்போது வீதியில் அடிபடும் சிங்களவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகி தமிழர்களை அடிக்க தயாராகுவார்கள்.அத்தனை சிங்களவர்களும் தமிழர்களின் சுயநிர்ணயம் தொடர்பில் இனவாதிகளாகவே உள்ளனர். சஜித் ரணில் மைத்திரி சரத்பொன்சேகா என்று கூட்டமைப்பு முட்டு கொடுத்த அனைவரும் சேர்ந்து தான் தமிழனை அழித்தார்கள்.

இப்பொழுது சிங்களவர்கள் துன்பப்படுகிறார்கள். அது அவர்களுடைய பாவக்கணக்காக இருக்கும். ஆனால் அவர்களோடு நாமும் துன்பப்பட்டாலும் எமக்கு இது புதிதல்ல. துன்பங்களை நாம் அனுபவித்து இருப்பதால் இது எமக்கு பெரிய துன்பமாக தெரியவில்லை. எம்மீது பொருளாதார தடையை விதித்து குப்பி விளக்கில் படிக்க வைத்து பனம்பழத்தை உணவாக உண்ண வைத்தவர்கள் இப்போது கஸ்டப்படுகிறார்கள். வாழ்க்கை ஒரு வட்டம் என்பது இதுதான். அவர்கள் சுமக்கும் பாவக்கணக்குக்கு மருந்தாக தமிழர்கள் ஏன் முட்டு குடுக்க போகவேண்டும்.

சஜித்தையோ ரணிலையோ பதவிக்கு கொண்டுவருவதற்காகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முட்டு குடுக்க போராட்டத்திற்கு போயிருக்கிறது. அதாவது பேயை கலைத்து பிசாசை ஆட்சியிலமர்த்த முயற்சிக்கின்றனர். தமிழ் மக்களை பொறுத்தவரை சஜித் கோத்தா இருவரும் ஒன்றுதான். மகாவம்ச மனநிலையிலுள்ள பௌத்த அடிப்படை வாதிகள் தான் இருவரும். நல்லாட்சி அரசின் போது தான் கோவில் வளாகத்தினுள் பிக்குவின் உடல் எரிக்கப்பட்டது. இதற்கு எதிராக ரணிலும் வரவில்லை. சஜித்தும் வரவில்லை. ஏன் முட்டு குடுத்த கூட்டமைப்பும் வரவில்லை. வந்தவர் ஞானசார தேரர். வந்து சொன்ன விடயம் இலங்கையின் அரசமைப்பில் பௌத்தத்திற்கு முதலிடம் உண்டு எனவும் தமிழர்கள் புலிகளை போல் பாய்வதை நிறுத்துங்கள் என்றும் சொன்னார்.. இதுதான் அவர்கள் மனநிலை.

2019 இல் 69 லட்சம் சிங்கள மக்கள் ஏன் கோத்தாவுக்கு வாக்களித்தனர். முஸ்லிம்கள் தொடர்பான இனவாதமே அது. சஹ்ரானின் குண்டுவெடிப்புடன் முஸ்லிம்கள் தொடர்பான இனவாதம் தொடங்கியது. சஹ்ரானின் குண்டு வெடிப்பு ஒரு நல்லதையும் செய்தது. அதாவது சிங்களவர்கள் எப்படிப்பட்ட இனவாதிகள் என்பதையும் தமிழர்களின் விடுதலைப்போராட்டம் நியாயமானது என்பதையும் முஸ்லிம்களுக்கு உணர்த்தியது. சிங்களவர்களுடன் சேர்ந்து முஸ்லிம் மக்களும் 2009 இல் பால் சோறு சாப்பிட்டவர்கள் என்பதும் குறிப்பிடக்கூடியது.

முஸ்லிம் அரசியல் வாதிகள் சிங்களவருக்கு முட்டுக்கொடுப்பது ஆச்சரியமல்ல. அவர்கள் ஒவ்வொரு அரசிலும் அமைச்சுப் பதவிக்காக முட்டு கொடுப்பார்கள். எனவே சஜித்துக்காக வீதியிலிறங்கி அவர்கள் முட்டு கொடுக்கின்றனர். ஆனால் முஸ்லிம் மக்கள் தான் பாவம். இந்த அரசியல் வாதிகளை நம்பி துன்பத்தை அனுபவிக்கின்றனர். சரி இப்போது தமிழர்களுக்கு சுயநிர்ணயத்தை வழங்க யாராவது முன்வரட்டும். அத்தனை சிங்களவர்களும் அதனை எதிர்த்து ஒன்றாக நிற்பார்கள். சிங்களவர்களின் மனதில் தமிழர்கள் தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் வரப்போவதில்லை. சிங்களவர்களின் இந்த இனவாத மனநிலை மாறாத வரை தமிழ் பேசும் மக்கள் அவர்களுக்கு முட்டு குடுப்பது தேவையில்லாத விடயமே. இந்த பொருளாதார நெருக்கடியில் அவர்களின் மனநிலை மாறும் என கனவு காண்பதும் பகல்கனவுதான். ஆக இப்போது தமிழ் பேசும் மக்கள் செய்யவேண்டியது அமைதியாக இருந்து நடப்பதை வேடிக்கை பார்ப்பது மட்டும் தான்.

## ஜீவன் தொண்டமான் இராஜினாமா

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் பதவியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் இராஜினாமா செய்வதோடு, அவரும் இ.தொ.காவின் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனும், பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கும் தீர்மானித்தனர். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை மற்றும் மக்களின் எதிர்பார்ப்புக்கு தலைசாய்த்தே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதென்று தெரிவித்த அக்கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான், தொடர்ந்தும் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் தீர்மானங்களை எடுக்கவும் மக்களுக்காக முன்னிற்கவும் இ.தொ.கா தயாராக இருக்கின்றதென்றும் குறிப்பிட்டார். இதேவேளை, கட்சியின் ஏகமனதான தீர்மானத்துக்கிணங்க, அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்ததாக கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளது.



01ஆம் பக்க தொடர்ச்சி...

சீனா : அதாவது சீனாவிடம் கடன் வாங்கும் எண்ணம் இல்லை. சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் திட்ட முதலீடுகள் எங்களுக்கு வேண்டாம் என்று நேபாள அரசு சீனாவிடம் தெரிவித்ததாக கூறப்படுகிறது. சீனாவிடம் கடன் வாங்கினால் கடுமையாக பாதிக்கப்படுவோம் என்பதை உணர்ந்து நேபாளம் இப்படி தெரிவித்ததாக கூறப்படுகிறது . பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் மூலம் உலகம் முழுக்க பல நாடுகளில் வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் பல்வேறு திட்டங்களை சீனா முன்னெடுத்து வருகிறது.

தெற்காசியா நிலை: முக்கியமாக தெற்காசியாவில் இருக்கும் சின்ன சின்ன நாடுகளில் சீனா அதீத கடன் கொடுத்து பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. பின்னர் அந்த நாட்டிற்கு கூடுதல் வட்டி போட்டுவிட்டு, அந்த நாடுகளை கடனில் மூழ்க வைத்து கடைசியில் அந்த நாட்டில் நினைத்ததை சாதித்துக்கொள்ளும் வழக்கத்தை சீனா வைத்துள்ளது. இதற்கு சீனா வைத்து இருக்கும் வசீகரமான பெயர்தான் "debt trap diplomacy".

பிளான்: சீனாவின் "debt trap diplomacy" காரணமாக பல நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மாண்டினீக்ரோவின் சாலை திட்டத்தால் அந்த நாடே கடனில் மூழ்கியது. சீனாவின் Export-Import Bank மூலம் 200 மில்லியன் டாலரை உகாண்டா கடனாக வாங்கி தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த கடனை இப்போதும் செலுத்த முடியாமல் அந்த நாடு திணறி வருகிறது. அதேபோல் குட்டி நாடான லாவோஸ் சீனாவிடம் வாங்கிய 1.2 பில்லியன் டாலர் கடனை அடைக்க முடியாமல் திணறி வருகிறது.

இரண்டு நாடுகள் என்ன? : இதில் கடுமையாக பாதிக்கப்பட்ட இரண்டு நாடுகள்தான் சீனா மற்றும் பாகிஸ்தான். இதில் பாகிஸ்தான் சீனாவிடம் பல்வேறு திட்டங்களுக்காக 385 பில்லியன் டாலர் கடன் வாங்கியது. தற்போது வட்டி மேல் வட்டி போட்டு பாகிஸ்தானின் பொருளாதாரம் சரிந்துள்ளது. இந்த கடனால் பாகிஸ்தான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. . அங்கு சில்லறை பணவீக்கம் 12.2 சதவிகிதமாகவும்., மொத்த பணவீக்கம் 23.6 சதவிகிதமாகவும் உள்ளது. பாகிஸ்தானின் மொத்த கடன் 50 டிரில்லியனை கடந்துள்ளது.

பாகிஸ்தான் நிலை : பாகிஸ்தானில் தற்போது கடுமையான உணவு தட்டுப்பாடு உள்ளது. அங்கு பார்லி, கோதுமையும் ஏப்ரல் வரை மட்டுமே கையிருப்பில் இருக்கும். உற்பத்தி உடனே தொடங்கப்படவில்லை என்றால் அந்நாட்டில் உணவு பஞ்சம் ஏற்படும். அதேபோல் காய்கறிகள், அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்ந்துள்ளது. சீனாவிடம் பாகிஸ்தான் வாங்கிய கடன் முழுக்க முழுக்க சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் கீழ் கட்டப்படும் சாலைகள், துறைமுகங்கள், பாலங்களுக்காக வாங்கப்பட்ட கடன். இதுதான் அங்கு பொருளாதாரம் சரிய காரணம். ஆனால் இதை அடைக்க முடியாமல் பாகிஸ்தான் திணறி வருகிறது. கடந்த வருடம் மட்டும் 26 பில்லியன் ருபாய் வட்டி மட்டும் கொடுத்துள்ளது.

இம்ரான் கான் ஆட்சி: பாகிஸ்தானில் இம்ரான் கான் ஆட்சிக்கு எதிராக புரட்சி வெடிக்க இதுவே காரணம். இலங்கையிலும் இதுதான் நடந்தது. இலங்கையில் மீண்டும் ராஜபக்சே குடும்பம் எழுச்சி பெற சீனாவின் ஆதரவுதான் காரணம் என்றும் கூறப்பட்டது. ராஜபக்சே குடும்பமும் சீனாவிற்கு இதற்காக தனது கதவுகளை திறந்துவிட்டது. இந்தியாவிற்கு அருகே குட்டி தீவு ஒன்றை கூட சீனாவிற்கு ராஜபக்சே குடும்பம் தாரை வார்த்தது. தற்போது அதே ராஜபக்சே குடும்பம் சீனாவிடம் இலங்கை வாங்கிய கடனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடன்: பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தில் கடன் வாங்கிய காரணத்தால்தான் இலங்கை கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆனால் அது மட்டுமே காரணம் இல்லை. தற்போது அந்த நாட்டிடம் அந்நிய செலாவணிக்கு டாலர் இல்லாத அளவிற்கு மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. தெற்கு ஆசியாவில் மட்டும் சீனா கொடுத்துள்ள கடன் 40 பில்லியன் டாலரை கடந்துள்ளது. பாகிஸ்தானின் 10 சதவிகித கடனை சீனாவிடம்தான், இலங்கையின் 6 சதவிகித கடன் சீனவிடம்தான்.

இலங்கை மோசம் : ஐஎம்எப் உதவியை இரண்டு முறை கேட்கும் நிலைக்கு இலங்கையின் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இலங்கையில் 1 லிட்டர் பெட்ரோல் விலை 260 ருபாய் வரை தொட்டுள்ளது. டீசல் விலை 210 ருபாய் வரை தொட்டுள்ளது. லங்கையில் 1 டாலருக்கு நிகரான ருபாய் மதிப்பு 297.99 ஆக உயர்ந்து உள்ளது. இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் மொத்த கோபமும் ராஜபக்சே குடும்பம் மீது திரும்பி உள்ளது. இதற்கு பின் உள்ள பல காரணங்களில் ராஜபக்சே - சீனா இடையிலான உறவும் முக்கிய காரணம் ஆகும்.

சீனா திட்டம் : இதனால்தான் தற்போது சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டம் வேண்டாம் என்று சொல்லும் முடிவிற்கு நேபாளம்வந்துள்ளது . ஒரு காலத்தில் சீனாவுடன் மிக நெருக்கமாக இருந்த நேபாளம்தான் இந்த முடிவை எடுத்துள்ளது. அதேபோல் மாலத்தீவு, வங்கதேசம் ஆகிய நாடுகளும் இதே எண்ணத்தில் இருக்கிறதாம். இலங்கை, பாகிஸ்தானுக்கு நேர்ந்த கதி நமக்கும் நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தில் இந்த குட்டி தேசங்கள் உள்ளதாம் hindustan times நிறுவனம் கட்டுரை வெளியிட்டுள்ளது.

## அரசாங்கத்திலிருந்து வெளியேற இ.தொ.க தீர்மானம்

கட்சியின் ஏகமனதான தீர்மானத்துக்கிணங்க, அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்ததாக கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளது.

தனது முகப்புத்தக கணக்கில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நேற்றைய(04.04.2022) தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதன் நிலைப்பாட்டைத் தெரிவித்தது.

## முடிந்தால் இந்த வாரமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும்– நாடாளுமன்றத்தில் சஜித்



முடிந்தால் இந்த வாரமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் வீதிகளில் கேட்கின்ற குரல்களை தவிர நாடாளுமன்றத்தில் வேறு எந்த குரல்கயும் ஒலிக்ககூடாது மக்கள் அரசாங்கத்தில் மாற்றங்களை எதிர்பார்க்கின்றனர் நாடாளுமன்றம் அதனை புரிந்துகொள்ளவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதற்கான யோசனையை இந்த வாரமே நாடாளுமன்றத்தில் கொண்டுவரவேண்டும் என சஜித்பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாங்கள் எந்த அமைச்சு பதவிகளையும் ஏற்கப்போவதில்லை மக்களின் ஆசீர்வாதத்துடனேயே அனைத்தையும் ஏற்போம்,ஐக்கிய மக்கள் சக்தி அமைச்சர் பதவிகளிற்காக வரவில்லை 113 பெரும்பான்மையை பெறுவதற்காக இரகசிய உடன்படிக்கைகளில் ஈடுபடாதீர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## எந்தவொரு பதவியையும் பொறுப்பேற்கப் போவதில்லை – ரணில் விக்ரமசிங்க



ரணில் விக்ரமசிங்க எந்தவொரு பதவியையும் பொறுப்பேற்கப் போவதில்லையென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இதன்படி ,தேசிய நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துக் கட்சிகளுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ள நிலையில் அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ரணில் விக்ரமசிங்கவின் முடிவை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது.

இதன்போது , சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கிணங்க அனைத்து கட்சித் தலைவர்களையும் ஒன்றிணைத்து குழுவொன்று அமைத்து தேசிய நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளதாகவும் அந்த நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் கிடையாதென்றும் அந்தக் கட்சி தெரிவித்தது. மேலும் , கட்சி பேதங்களின்றி தேசிய ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டுமெனவும் பாராளுமன்றம் கூட்டப்பட்ட உடனேயே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## அவசரகால சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதில்லை– சுசில் பிரேமஜயந்த

அவசரகால சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அவசரகால சட்டத்தை நீடித்துக்கொள்வதற்காக நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவரும் நிலையில் அதற்கு ஆதரவளிப்பது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மேலும் அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணைக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனுர பிரியதர்ஷன யாப்பா, சந்திம வீரக்கொடி ஆகியோரும் ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார். இவர்கள் அல்லாமல் அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளில் இருக்கும் அதிகமான உறுப்பினர்கள் அவசரகால சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என நம்புவதாகவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அத்துடன் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி பக்கம் இருந்தாலும் அரசாங்கத்தின் தீர்மானங்கள் மற்றும் வேலைத்திட்டங்களுக்கு தான் இணங்கப்போவதில்லை என்றும் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்

01ஆம் பக்க தொடர்ச்சி...

இன்று சாதாரண நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த குடும்பங்களில் ஒவ்வொரு அங்கத்தவரும் வெவ்வேறு பொருள்களுக்காக நாள்தோறும் வெவ்வேறு வரிசையில் காத்திருக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. தினசரி கூலிக்கு வேலை செய்யும் மக்கள் தமது அன்றாட வருமானத்தை இழந்துள்ளனர். பலர் பட்டினியின் கொடுமையை அனுபவிக்கத் தொடங்கி உள்ளனர். முஸ்லிம்கள் இந்தப் புனித மாதத்தில் நிம்மதியாக இறைவழிபாடுகளில் ஈடுபட முடியாதவாறும், தமது நோன்பு கால அன்றாட தேவைக்கான பொருள்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாமலும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இந்த நிலை இந்த நாட்டு மக்கள் மீது அரசாங்கம் இழைத்துள்ள மாபெரும் குற்றமாகும். இந்த நிலையை நீக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டிய பொறுப்பு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சார்ந்ததாகும். இவ்வளவு காலமும் சமூகத்தை மறந்து தமக்கு வாக்களித்த மக்களை புறக்கணித்து அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைத் தூக்கி எறிந்து சுகபோகங்களுக்கும் சுயநலத்துக்கும் ஆசைப்பட்டும் அடிமைபட்டும் நடந்து கொண்டது போல் இனிவரும் நாற்களிலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளக் கூடாது என நான் வேண்டிக் கொள்கிறேன்.

இனியாவது அவர்கள் தமக்கு வாக்குகளித்த மக்களுக்கு ஆதரவாக செயற்பட வேண்டும்.இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இந்த அரசின் தோல்விகளை ஒப்புக் கொள்ளுமாறு முஸ்லிம் மக்கள் இவர்களை நிர்ப்பந்தியுங்கள். மக்களின் கொழுந்து விட்டு எரியும் பிரச்சினைகளில் கவனம் செலுத்துமாறு அவர்களை வற்புறுத்துங்கள். மக்களின் அடிப்படை உரிமைகள் அரசாங்கத்தால் மறுக்கப்படுகின்றமையை எதிர்த்து குரல் கொடுக்குமாறு அவர்களுக்கு நெருக்குதல் கொடுங்கள். ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதும் இந்த அரசாங்கத்தின் அடக்குமுறைக்கும் கொடுங்கோல் ஆட்சிக்கும் எதிராக முஸ்லிம்களும் தமது நகரங்களில் திரண்டு தமது எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும் எனவும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சகித்துக் கொள்ள முடியாத இந்த ஆட்சிக்கு எதிராகவும், நாட்டின் இன்றைய நிலைமைகளுக்கு காரணமான அரசைக் கண்டித்தும் பொரும்பாலான மக்கள் வீதிகளில் இறங்கி உள்ள வேளையில் நாமும் இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற வகையில் அவர்களோடு கைகோர்த்து செயற்பட முன்வர வேண்டும் என முஸ்லிம் மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## 20வது திருத்தத்தை இரத்துச்செய்துவிட்டு 19 வது திருத்தத்தை மீண்டும் கொண்டுவரவேண்டும்



அரசமைப்பின் 20வது திருத்தத்தை இரத்துச்செய்துவிட்டு 19 வது திருத்தத்தை மீண்டும் கொண்டுவரவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்படுவார்கள் என தெரிவித்துள்ள அவர் மோசமடைந்து வரும் பொருளாதார நிலையால் பொதுமக்களிற்கு ஏற்பட்டுள்ள மோசமான பாதிப்புகளை தீர்ப்பதற்கான முயற்சிகளிற்கும் அவர்கள் ஆதரவளிப்பார்கள் என குறிப்பிட்டுள்ளார். தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு நாடாளுமன்ற பொறிமுறை மூலம் தீர்வை காண்பதற்கான முயற்சிகளை சபாநாயகர் முன்னெடுக்கவேண்டும் என்ற வேண்டுகோளிற்கு சிறிசேன ஆதரவளித்துள்ளார்.

## மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்க கலாநிதி நந்தலால் வீரசிங்க இணக்கம்



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கு தாம் இணங்குவதாக கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து, ஆளுநர் பதவியை பொறுப்பேற்பதற்காக நாளை மறுதினம்(07) நாட்டை வந்தடையவுள்ளதாக, தற்சமயம் வெளிநாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ள கலாநிதி நந்தலால் வீரசிங்க நியூஸ்பெஸ்ட்டுக்கு கூறியுள்ளார்.இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய அஜித் நிவாட் கப்ரால் நேற்று(04) தமது பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்று(05) முதல் 8ஆம் திகதி வரை ஆறரை மணித்தியால மின்வெட்டு

இன்று(05) முதல் எதிர்வரும் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மின்வெட்டை அமுல்படுத்துவதற்கான அட்டவணையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, தினமும் ஆறரை மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

A,B,C,D,E,F,G,H,I,J,K மற்றும் L ஆகிய வலயங்களில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப்பகுதியில் 04 மணித்தியாலங்களுக்கும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையில் 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களுக்கும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

P,R,S,T,U,V மற்றும் W ஆகிய வலயங்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரையில் 04 மணித்தியாலங்களுக்கும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 11 மணி வரையில் 02 மணித்தியாலங்கள் 30 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

## அவசரகாலச் சட்டத்தை வாக்கெடுப்புக்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

அவசரகாலச் சட்டத்தை வாக்கெடுப்புக்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

14 நாட்கள் இருக்க அனுமதிக்காமல் அவசரகாலச் சட்டத்தின் மீது உடனடியாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார். இன்று காலை 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தன தலைமையில் கூடியது. வாய்மூல கேள்விக்கான ஒதுக்கப்பட்ட நேரத்தின் போது அவர் இந்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.



## உக்ரைனில் கிராம தலைவர் குடும்பத்துடன் கொலை

கிராமம் ஒன்றின் தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினரை ரஷ்யப் படைகள் கொலை செய்துள்ளதாக உக்ரைய்ன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தலைவியுடன் சேர்த்து அவரது கணவர் மற்றும் மகன் ஆகியோர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பூகா நகர வீதியோரங்களில் சிவில் உடையில் காணப்பட்ட சடலங்களில் இவர்களும் அடங்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை. உக்ரைனில் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான கொலைகளுக்கு எதிரான சர்வதேச கண்டனங்கள் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## நாட்டில் இருந்து வெளியேறிய நிஸ்ஸங்க சேனாதிபதி

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை. இன்று காலை டுபாய் செல்லும் விமானத்தில் அவர் நாட்டிலிருந்து புறப்பட்டதாக எமது விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார்.

அவரது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் நேற்று மாலை மாலைத்தீவிற்கு புறப்பட்டுச் சென்றதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.



## ரஸ்ய நகரத்திற்குள் நுழைந்து உக்ரைன் ஹெலிக்கொப்டர்கள் எண்ணெய் சேமிப்பு கிடங்கின் மீது தாக்குதல்

ரஸ்யாவில் உள்ள எண்ணெய் குதமொன்றின் மீது உக்ரைன் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.



உக்ரைனிற்கு வடக்கே உள்ள ரஸ்யாவின் பெல்கொரொட் நகரின் எண்ணெய் சேமிப்பு கிடங்கின் மீது உக்ரைனின் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளன என ரஸ்யா தெரிவித்துள்ளது.

ரஸ்யாவின் கடும் எறிகணை தாக்குதலிற்கு உள்ளாகியுள்ள ரஸ்ய படையினரின் முற்றுகைக்கு உள்ளாகியுள்ள கார்கிவ் நகரிலிருந்து வடக்கில் உள்ள ரஸ்ய நகரில் உள்ள எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் மீதே உக்ரைன் ஹெலிக்கொப்டர் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இரண்டு உக்ரைன் ஹெலிக்கொப்டர்கள் எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் மீது மேற்கொண்ட தாக்குதலால் தீ மூண்டுள்ளது என தெரிவித்துள்ள அந்த நகரத்தின் ஆளுநர் தாழ்வான உயரத்தில் பறந்து அவை ரஸ்யாவிற்குள் நுழைந்தன என தெரிவித்துள்ளார். எவரும் கொல்லப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை விவகாரம் – மோடி ஆலோசனை!

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தி வருகிறார்.

கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள். உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து இலங்கை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர். அந்நாட்டின் அதிபர் கோத்தபய ராஜபட்ச. பிரதமர் மகிந்த ராஜபட்ச. நிதியமைச்சர் பசில் ராஜபட்ச ஆகியோரை சந்தித்து பொருளாதார பிரச்சனை குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில். இன்று பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த ஜெய்சங்கர். இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் பாகிஸ்தானின் அரசியல் சூழல் குறித்தும் ஆலோசனை நடத்தி வருகிறார்.

முன்னதாக. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றத்தை கலைப்பதாகவும். மூன்று மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் எனவும் அந்நாட்டின் அதிபர் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.



## மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழந்தது அரசாங்கம்!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 43 பேர் அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக்கொள்வதாக அறிவித்துள்ள நிலையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் இழந்துள்ளது.

இதன்படி அரசாங்கத்தில்' இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேர் இன்று விலகுவதாக அறிவித்தனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும். விமல்வீரவன்ச தரப்பின் 16 பேரும் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அறிவித்தனர்.